முருகப்பெருமான் துணை

***இந்த நூல் முருகப்பெருமானே அரங்கமகானுக்காக கைப்பட எழுதிய நூலாகும்***

***இதை பக்தியுடன் படிப்பவர்களுக்கு ஞானம் சித்திக்கும்***

**துறையூர் ஓங்காரக்குடிலாசான் ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகளுக்கு**

**மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்**

**பாகம்: 582**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

**03.05.2021**, திங்கட்கிழமை

1. ஓங்கார பலம் கொண்ட அரங்கா வாழ்க
ஓங்காரன் என் துணைகொண்ட தேசிகா வாழ்க
ஓங்காரக்குடிலின் உயர் ஞானியாக
ஓங்கார உலகம் படைக்க வந்துதித்த குருராஜனே வாழ்க
2. வாழ்க என வாழ்த்தி சுப்ரமணியர் யானும்
வழங்குவேன் ஞான அறிவுரை ஆசி தன்னை
ஊழ் வெல்லும் மகா சக்தி கொண்ட
உயர் ஞானி கலியில் நீதானப்பா
3. அப்பனே அரங்கனே உன் தர்மம்
அகிலத்தை மாற்றி அமைக்கக் கூடும்
ஒப்புக்கொண்டு உன் வரம்பெற்ற மக்கள்
உலகினில் ஞானவான்களாக சிறந்து
4. சிறந்துமே கலிதனை மாற்றுகின்ற
சிறப்பறிவு கொண்ட ஞானிகளாகி
பரந்த உலகமெங்கும் உன் சக்தி பரவி
பாருலகமே ஞான யுகமாற்றம் பெறக்கூடும்
5. மாற்றம் தரும் மாதவசி நீயப்பா
மக்களை காக்கும் மகா யோகி நீயப்பா
ஆற்றல்பட உமக்கு என் சக்தி பெருகிவர
அரங்கனே உன் வழி அற்புதம் யான் அகிலத்தில் நிகழ்த்துவேன்
6. மாற்றம் செய்து மக்களையும்
மகத்துவம்பட இந்த மண்ணையும் காத்து
காத்துமே கலியுகத்தையும் ஞானயுகமாக்கி
கருணைபட உன் வழி பாதுகாப்பு பெறச்செய்வேன்
7. உற்றதொரு மேன்மைகொள்ள உயர்வு கொள்ள
ஓங்காரன் உன் வழி உலக மக்கள் வரவர
மாற்றம் செய்து ஆறுமுகன் யான் மண்ணுலகில்
மகா அற்புதம் நிகழ்த்துவேன்

ஞான அறிவுரை ஆசி முற்றே

–சுபம்–

*ஐயன் வேலவன் அடியினைப் போற்றிட*
*வையகம் போற்ற வாழ்வார் நலமே!*
*பற்றறுத்த வேலவன் பதத்தை பற்றிட*
*நற்றவமும் சித்திக்கும் நமனும் அஞ்சுவன்!*
*ஆட்சிதான் மாற்றமும் அருளுவான் வேலனும்*
*மாட்சிமை மிக்க மக்கள் வாழவே!*

துறையூர் ஓங்காரக்குடில் மூலமாக ஆசான் முருகப்பெருமான் ஆசியால் 20 கோடி பேர்களுக்கு மேலாக தொடர்ந்து அன்னதானம் செய்து வருகிறோம். இனிவரும் காலங்களிலும் முருகப்பெருமான் துணையுடன் மேன்மேலும் சிறப்பாக அன்னதானம் செய்வோம்.

– ஆறுமுக அரங்கமகா தேசிகர்.